சார்பு நீதிமன்றம், மன்னார்குடி

OS 174/2019

16**.09.2025**

**DW/PW-**

**வா.சா. 1 ரவிச்சந்திரன் த/பெ. சிவமணி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 2 முதல் 4 மற்றும் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி –**

நாங்கள் மாரியப்பத்தேவர் வாரிசுகள் என்றால் இல்லை. செங்கம்மாள் என்பவரின் வாரிசு ஆவோம். செங்கமாளுக்கு 8 பேர் வாரிசு என்றால் தவறு. கோவிந்தராசு , சிவமணி, காசிநாதன் ஆகிறோர்கள் மட்டுமே வாரிசுகள் ஆவோம். மேற்படி மூவரும் இறந்துவிட்டார்கள். அவர்கள் அனைவரும் திருமணமாகி குடும்பத்தோடு இருந்த நிலையில் தான் இறந்தார்கள். கோவிந்தராசுக்கு 1 மனைவி பெயர் செங்கம்மாள், 1 மகன், 1 மகள் வாரிசுகள் ஆவார்கள். என் அப்பா பெயர் சிவமணி என் தாயார் பெயர் ஜெயலட்சுமி என் தாயார் இறந்து 47 ஆண்டுகள் ஆகிறது. என்னுடன் பிறந்தவர்கள் 8 பேர். பாலகிருஷ்ணன், இராஜேந்திரன், செங்கொடி, இளரா , ஸ்டாலின், கீதா, சித்ரா மற்றும் நான் ஆவோம். காசிநாதன் இறந்துவிட்டார் மனைவி பெயர் அமரஜோதி காசிநாதன் தம்பதிக்கு வாசுகி ,ராமலிங்கம், அன்பு செல்வி, சிவக்குமார் ஆகிய 4 பேர் வாரிசுகள் ஆவோம். இந்த வழக்கில் 9 பிரதிவாதிகளை சேர்த்துள்ளோம். என் தகப்பனாரின் 8 வாரிசுகளையும் வழக்கில் சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. அவர்கள் எனக்கு எழுதிக்கொடுத்துவிட்டார்கள். 20 ரூபாய் பத்திரத்தில் எழுதிக்கொடுத்தார்கள் பதிவு செய்யவில்லை. இந்த வழக்கிற்கு பின்பு எழுதிக்கொடுத்தார்கள். என் தகப்பனார் இறந்தபின்பு மற்ற வாரிசுகள் எனக்கு எழுதிக்கொடுத்தது தொடர்பாகவும் நான் தான் இந்த வழக்கை நடத்திவருகிறேன் என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. 23.07.2019 ல் தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணம் என் அப்பாவின் கையெழுத்து தான் அது என் அப்பா புகைப்படம் என்றால் சரிதான். ஆனால் அந்த ஆவணத்தைப்பற்றி எனக்கு தெரியாது. சர்வே எண் 207 / A 14 A என் அப்பாவிற்கு சொந்தமான சொத்தா என்றால் அதுப்பற்றி தெரியாது. வழக்கு சொத்தை தவிர செங்கம்மாள் பெயரில் உள்ள சொத்துகள் எங்கு எங்கு உள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதி தாக்கல் செய்த எதிரிவழக்குரையை படித்து பார்த்துள்ளேனா என்றால் இல்லை. அந்த எதிர்வழக்குரையில் வழக்கு சொத்து இல்லாமல் 4 மா நிலம் மேலதிருபாலக்குடி கிராமத்தில் உள்ளது என்றால் அப்படி ஒரு சொத்தே இல்லை என்று சாட்சி கூறுகிறார். செங்கம்மாள் வாரிசுகள் 25 என்றால் இல்லை நாங்கள் 17 பேர் தான் வாரிசுகள் ஆவோம். 17 பேர் வாரிசுகள் உள்ள நிலையில் வழக்கில் 9 நபர்களை மட்டும் சேர்த்தற்கு காரணம் உள்ளதா என்றால் என் அப்பா தான் வழக்கு தாக்கல் செய்ததால் சேர்க்கவேண்டிய அவசியம் இல்லை. அப்பா இறந்தபின்பு 17 வாரிசுகளையும் வழக்கில் சேர்த்திருக்கவேண்டும் என்றால் சரியல்ல. என் உடன்பிறந்த சகோதரர்களிடம் எந்த ஒரு பதிவு செய்யப்பட்ட ஆவணமும்

பெறாதநிலையில் அவர்களை இந்த வழக்கில் கட்சியாக சேர்த்திருக்கவேண்டும் என்றால் சரியல்ல. வழக்கில் நான் கோரியுள்ள 1/3 பாகம் கேட்டிருப்பது தவறு என்றாலும் அதுபோன்ற பாகத்தை நான் கேட்க முடியாது என்றால் சரியல்ல. உரிய தரப்பினர்களை சேர்க்காத நிலையிலும் அனைத்து சொத்துகளையும் சேர்க்காத நிலையில் என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப்பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

ஓம்/– எஸ். முத்துராமன்,
சார்பு நீதிபதி,
மன்னார்குடி.